ம.சா. 2 தங்கசாமி Trust.O.P.No. 61 /2023 03.04.2025

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

மனுதாரருடன் யார் யார் சேர்ந்து மனுதாக்கல் செய்தார் என்றால் சந்தனம் செட்டியார், ஆவுடையப்பன் செட்டியார். அவருடைய தகப்பனார் பெயர் தெரியாது. சந்தனம் செட்டியாருக்கும், ஆவுடையப்பன் செட்டியாருக்கும் என்ன உறவு என்றால் பங்காளி உறவு. என்ன வழக்கு என்றால் சொந்து சம்பந்தமான ஆவண வழக்கு. சந்தனம் செட்டியார் சொத்தில் பழனிச்சாமி, காட்டுராஜா என்பருவரும் அனுபவம் செய்து வருகிறார்கள். அந்த சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த சொத்து சுமார் 2 ஏக்கருக்கு மேல் இருக்கும். மதிப்பு பற்றி தெரியாது. மேற்படி சொத்து ஆதியில் சந்தனம் செட்டியாருக்கு உரிமை. அவருக்கு பூர்விகமான உரிமை. சந்தனம் செட்டியாருக்கு 1 ஆண் மற்றும் 1 பெண் குழந்தைகள் உள்ளது. குழந்தைகளுக்கு சொத்தை பிரித்து கொடுக்க வில்லை. சந்தனம் செட்டியார்தான் அனுபவம் செய்து வருகிறார். மேற்படி சொத்தில் என்ன மகசூல் செய்கிறார்கள் என்றால் விவசாயம் செய்யவில்லை, செட்டு போட்டு வாகனங்களை நிறுத்தி இடைஞ்சல் செய்து வருகிறார். அதனால் தான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்.

மறு விசாரணை – இல்லை